

கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன் தினம் (22.3.2024) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், புதிய திராவிட கழகத்தின் நிறுவனத் தலைவர் கே.எஸ்.ராஜ்கவுண்டர் மற்றும் நிர்வாகிகள் சந்தித்து, மக்களவைத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழக கூட்டணி கட்சிகளுக்கு ஆதரவு தெரிவித்தனர்.



கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (22.3.2024) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், தென்னக அருந்ததியர் மக்கள் முன்னேற்றக் கூட்டமைப்பின் மாநில தலைவர் எஸ்.செங்குட்டுவன் மற்றும் நிர்வாகிகள் சந்தித்து, மக்களவைத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழக கூட்டணி கட்சிகளுக்கு ஆதரவு தெரிவித்தனர்.



கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (22.3.2024) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், சமூகநீதி மக்கள் கட்சி மாவீரன் பொல்லான் பேரவையின் தலைவர் வடிவேல் ராமன் மற்றும் நிர்வாகிகள் சந்தித்து, மக்களவைத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழக கூட்டணிக் கட்சிகளுக்கு ஆதரவு தெரிவித்தனர்.

### இலங்கைச் சிறையில் உள்ள அனைத்து

# மீனவர்களையும் - மீன்பிடிப் படகுகளையும் விடுவித்திட நடவடிக்கை எடுத்திடுக!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் - ஒன்றிய வெளியுறவுத்துறை அமைச்சருக்கு கடிதம்!

சென்னை, மார்ச் 24-

இலங்கைச் சிறையில் உள்ள அனைத்து மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவிக்கவும், அவர்களுக்குத் தேவையான சட்ட உதவிகளை செய்திடவும் வலியுறுத்தி ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கருக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்.

இதுகுறித்து அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு வருமாறு:-

தமிழ்நாட்டைச் சேர்ந்த 32 மீனவர்கள், எல்லை தாண்டி மீன் பிடித்ததாகக் கூறி 21-3-2024 அன்று இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், இலங்கை அரசால் சிறைபிடிக்கப்பட்டுள்ள அனைத்து மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடு வித்திடவும், அவர்களுக்குத் தேவையான சட்ட உதவிகளைச் செய்திடவும் வலியுறுத்தி, முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் அவர்களுக்கு நேற்று முன்தினம் (22-3-2024) கடிதம் எழுதியுள்ளார்.

இலங்கைக் கடற்படையினரால் இந்திய மீனவர்கள் அண்மைக் காலமாக தொடர்ந்து கைது செய்யப்படுவது ஆழ்ந்த வேதனையை அளிப்பதாகவும், கடந்த சில வாரங்களாக பல்வேறு சம்பவங்களில் இந்திய மீனவர்கள் தொடர்ந்து கைது செய்யப்படுவது, அவர்களது குடும்பத்தினரிடையேயும், மீனவ சமூகத்தினரிடையேயும் பெருத்த மன உளைச்சலையும், நிச்சயமற்ற சூழலையும் ஏற்படுத்தியுள்ளதாகவும் வேதனையோடு குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், 21-3-2024 அன்று தமிழ்நாட்டைச் சேர்ந்த 32 மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதையும், அவர்களது 5 விசைப்படகுகள் இலங்கைக் கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்டுள்ளதையும் தனது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த இரண்டு வாரங்களில் மட்டும் 76 மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், பாதிக்கப்பட்ட மீனவர்களின் பாதுகாப்பு மற்றும் வாழ்வாதாரத்தைக் கருத்தில் கொண்டு, இப்பிரச்சினையில் தாமதம் ஏதுமின்றி தீர்வு காண, தீர்க்கமான நடவடிக்கை எடுக்க வலியுறுத்தியுள்ள முதலமைச்சர் அவர்கள், இலங்கை நீதிமன்றங்களில் தண்டனை பெற்று, இலங்கை சிறைகளில் வாடும் மீனவர்களுக்கு தேவையான சட்ட உதவிகளை வழங்கிடவும் கேட்டுக்கொண்டுள்ளார்.

எனவே, இலங்கை அரசால் சிறை பிடிக்கப்பட்டுள்ள அனைத்து மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவித்திடவும் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் அவர்களைக் கேட்டுக் கொண்டுள்ள முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், இலங்கைச் சிறைகளில் வாடும் மீனவர்களுக்குத் தேவையான சட்ட உதவிகளை உறுதி செய்திடவும் தனது கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளார்.

இவ்வாறு அரசு செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### கவிச்சக்கரவர்த்தி

# கம்பர் திருவுருவச் சிலைக்கு - இன்று மலர் வணக்கம்!

### தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

சென்னை, மார்ச் 24-

கவிச்சக்கரவர்த்தி கம்பர் திருவுருவச் சிலைக்கு இன்று மலர் வணக்கம் செய்யப்படுவது குறித்து தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:-

கம்பன் ஓர் உலகப் பெருங்கவிஞர்; உலகப் பெருங் காப்பியங்களின் வரிசையில், உன்னதமான இடம் வகிக்கும் ஒரு பெருங்காப்பியத்தைப் படைத்த பெருமைக்கு உரியவர்; ‘புகழ்க் கம்பன் பிறந்த தமிழ்நாடு’ என்று சொல்லிப் பெருமிதம் கொள்ளும் அளவிற்கு அருந்தமிழுக்கு அழியாதப் புகழ் சேர்த்தவர். இராமாவதாரம் என்ற கம்பர் காப்பியம் பாலக் காண்டம், அயோத்தியாக் காண்டம், ஆரணியக் காண்டம், இலங்கைக் காண்டம் என ஆறு காண்டங்களாக 10,368 பாடல்களைக் கொண்டது. ஒரு பாடலுக்கு நான்கு சீர்களில் இருந்து எட்டுச் சீர்கள் வரையிலான நான்கு அடிகளைக் கொண்ட பாடல்களைக் கொண்டு படைத்தார்.

கம்பன் உருவாக்கிய காப்பிய மரபுகள், அவருக்குப் பின் காப்பியப் படைப்பில் ஈடுபட்ட அனைத்துக் கவிஞர்களாலும் பின்பற்றப்பட்டன என்பதில் ஐயமில்லை.

‘சிலையெழுபது’, ‘சடகோபர் அந்தாதி’, ‘சரசுவதி அந்தாதி’, ‘திருக்கை வழக்கம்’, ‘ஏரெழுபது’ மற்றும் ‘மும்மணிக்கோவை’ போன்றவை கம்பர் படைத்த படைப்புகளாகும். கம்பரின் கவித்திறனை நேரில் கண்டு வியந்த சோழ மன்னர், ‘கவிஞர்களின் பேரரசர்’ என்றும் ‘கவிச்சக்கரவர்த்தி’ என்றும் பட்டம் சூட்டினார். “கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும்” என்றொரு பழமொழியே உருவாகும் அளவிற்கு, கம்பரது புகழும், கவித்திறமையும் அனைவராலும் இன்றளவும் பேசப்பட்டு வருகிறது.

கவிச்சக்கரவர்த்தியை நினைவுகூரும் வகையில் தமிழ்நாடு அரசின் சார்பில் தமிழ் வளர்ச்சித் துறையால் ஆண்டுதோறும் மார்ச்சுத் திங்கள் 24ஆம் நாளன்று சென்னை அண்ணா சதுக்கத்திலுள்ள கம்பர் சிலைக்கு மலர் மாலை அணிவித்து மலர் வணக்கம் செய்யப்பட்டு வருகிறது. அவ்வகையில், இன்று (24.03.2024 - ஞாயிற்றுக்கிழமை) காலை 10.00 மணிக்கு கம்பர் திருவுருவச் சிலைக்கு மலர் மாலை அணிவித்து சிறப்பிக்கும் நிகழ்ச்சி நடைபெறுகிறது. நாடாளுமன்ற தேர்தல் நடத்தை விதிகள் நடைமுறையில் இருப்பதால், அரசு செயலாளர், தமிழறிஞர்கள், எழுத்தாளர்கள் மற்றும் தமிழ் வளர்ச்சித் துறை அலுவலர்கள், பொது மக்கள் ஆகியோர் மட்டும் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளனர்.

இவ்வாறு அரசின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



22.03.2024, அன்று முன்னாள் மாவட்டக் கழகச் செயலாளர் சொ. காவேரிமணியம் 18 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்ச்சியையொட்டி அவரது திருவுருவப் படத்திற்கு மதுரை மாநகர் மாவட்டம், மாவட்டச் செயலாளர், கோ.தளபதி, முன்னாள் அமைச்சர் பொன் முத்துராமலிங்கம், வே.வேலுச்சாமி, ஒச்சுபாலு, தனசெல்வம், ஜெயராமன், காவேரிசொக்கலிங்கம், மா.முத்துராமலிங்கம்,அக்ரி கணேசன், மூவேந்திரன், ராகவன், எஸ்.வி.சுதன், வைகை பரமன், எஸ்.எஸ்.மாறன், கருப்பசாமி எம்.எஸ். ஸ்ரீதர், கிருஷ்ணப்பாண்டி, சௌந்தராஜன், ராம் பிரசாத், பி.வி.சேகர், கா.ரா.முருகேசன், ஆறுமுகம், யோகராஜ், திராவிட மாரி, விஜயசேகர் பாண்டியன், செல்லூர் ராஜரத்தினம், சேட்சிலா, சீனி ரமேஷ், வெங்கடேசன், தாவுத் சித்திக், சிவமணி, முத்துகருப்பன், வேல்முருகன், சு.பா.கண்ணன், எஸ்.டி. சண்முகம், ஆர்.மாணிக்கம், அவளி முருகன், சௌந்தராஜன், அவளி சிவமணி ஆகியோர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்: காவேரி சொக்கலிங்கம், சா.அண்ணாதுரை, கௌதம் காவேரிமணியம், டி.மனோகர், டி.ஹரிஹரன், எஸ்.கண்ணன், எஸ்.ரவி,அ.மூர்த்தி, எம். முனீஸ்வரன், மாமன்ற உறுப்பினர் விஜயலக்ஷ்மி பாண்டியன் ஆகியோர் அஞ்சலி செலுத்தினர்.

### அரசியல் சாசனத்தின் உணர்வை நிலைநாட்டி -

# ஜனநாயகத்தைக் காப்பாற்றிய உச்சநீதிமன்றத்திற்கு நன்றி!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!



**சென்னை, மார்ச் 24 -**

**அரசியல் சாசனத்தின் உணர்வை நிலைநாட்டி ஜனநாயகத்தைக் காப்பாற்றிய உச்சநீதிமன்றத்திற்கு தமிழ்நாட்டு மக்களின் சார்பாக எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.**

இதுகுறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு :

அரசியல் சட்டத்தின் காவலரணான மாண்பமை உச்சநீதிமன்றம், சரியான நேரத்தில் தலையிட்டு, அரசியல் சாசனத்தின் உணர்வை நிலைநாட்டி, ஜனநாயகத்தைக் காப்பாற்றியதற்காக, தமிழ்நாட்டு மக்களின் சார்பாக எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த பத்தாண்டுகளில், ஜனநாயகச் சிதைவையும், கூட்டாட்சியின் மறைவையும், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட இறையாண்மை கொண்ட அரசாங்கங்களின் செயல்பாட்டிற்கு முன் கூர்முனைகளை இடும் தவறான சாகசங்களையும், பல ஆண்டுகளாகக் கடைப்பிடிக்கப்பட்டு வந்த மரபுகள் கைவிடப்பட்டதையும் இந்திய மக்கள் கண்டு வருகின்றனர்.

2024 மக்களவைத் தேர்தல், மக்களாட்சியைக் காப்பாற்றவும், அரசியலமைப்பை நிலைநிறுத்தவும் மிக முக்கியமானது.

நமது புகழ்மிகு நாட்டை நாசமாக்க அச்சுறுத்தும் பாசிச சக்திகளின் அப்பட்டமான அதிகார அத்துமீறலைத் தடுக்கக் கடுமையாகப் பாடுபடுவோம்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

### ‘இந்தியா’ கூட்டணியின் மார்க்சிஸ்ட் வேட்பாளர் சு.வெங்கடேசனை ஆதரித்து - இன்று

# மதுரையில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வாக்கு சேகரிப்பு!

### மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. அறிக்கை!



மதுரை, மார்ச் 24 -

மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கழக இளைஞரணி செயலாளர் - இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மதுரை நாடாளுமன்றத் தொகுதி இந்தியா கூட்டணியின் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வெற்றி வேட்பாளர் தோழர் சு. வெங்கடேசன் அவர்களை ஆதரித்து இன்று (24.03.2024-ஞாயிற்றுக்கிழமை) மாலை 6.00 மணியளவில் மதுரை வடக்கு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கோ.புதூர் பேருந்து நிலையம் அருகில் தேர்தல் பரப்புரை மேற்கொண்டு, பொதுமக்களிடம் வாக்கு சேகரிக்க உள்ளார்கள்.

இந்நிகழ்ச்சியில் கழக நிர்வாகிகள், கூட்டணி கட்சித் தலைவர்கள் மற்றும் நிர்வாகிகள் அனைவரும் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### மதுரை மாநகர் முன்னாள் மாவட்டச் செயலாளர்

# சொ.காவேரி மணியம் நினைவு தினம்!

### கோ.தளபதி எம்.எல்.ஏ. – பொன் முத்துராமலிங்கம் – வ.வேலுசாமி – பெ.குழந்தைவேலு அஞ்சலி!

மதுரை, மார்ச் 24 -

மதுரை மாநகர் மாவட்ட முன்னாள் செயலாளர் சொ.காவேரி மணியத்தின் 18 வது நினைவு தின நிகழ்ச்சியை முன்னிட்டு அவனியாபுரத்தில் உள்ள அவரது இல்லத்தில் வைக்கப்பட்டிருந்த அன்னாரின் திருவுருவ ப்படத்திற்கு மதுரை மாநகர் மாவட்ட செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ., முன்னாள் அமைச்சர் பொன் முத்துராமலிங்கம், கழக நிர்வாகிகள் வ.வேலுசாமி, பெ.குழந்தைவேலு, மற்றும் கழகத்தினர் மாலை அணிவித்து மரியாதை செய்தார்கள்.

மேலும் இந்நிகழ்ச்சியில் கழக நிர்வாகிகள் மா.ஜெயராமன், கே.தன செல்வம், மா.ஒச்சுபாலு, காவேரி சொக்கலிங்கம், மூவேந்திரன், அக்ரி கணேசன், ராகவன், வைகை பரமன், சௌந்தரராஜன், விஜயலட்சுமி பாண்டியன், மா.முத்துராமலிங்கம், எஸ்.எஸ்.மாறன், கருப்பசாமி, கிருஷ்ண பாண்டியன், ஆறுமுகம், சுபா கண்ணன், சண்முகம், சீனி ரமேஷ், திராவிட மாரி உள்ளிட்ட பலர் பங்கேற்றார்கள்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை காவேரி சொக்கலிங்கம், அண்ணாதுரை, கௌதம், காவேரி மணியம், மனோகர், ஹரிஹரன், கண்ணன், மூர்த்தி, ரவி முனீஸ்வரன் ஆகியோர் செய்திருந்தார்கள்.




ஒட்டன்சத்திரம் சட்டமன்றத் தொகுதி தேர்தல் பணிக்குழு சார்பில் திண்டுக்கல் பாராளுமன்ற தொகுதி சி.பி.எம். வேட்பாளர் சச்சிதானந்தத்தை ஆதரித்து நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் கழகதுணைப் பொதுச் செயலாளர் இ.பெரியசாமி அறிமுகப்படுத்தி சிறப்புரை யாற்றினார். நிகழ்ச்சியில் அமைச்சர் அர.சக்கரபாணி, கிழக்கு மாவட்டச் செயலாளர் இ.பெ.செந்தில்குமார் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் உள்ளனர்.